தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1967 ஜூலை 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் **பேரவை** மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்--விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினாக்கள்-விடைகள். உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள். வினா எண் 229 தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

தீப்பெட்டித் தொழிற்சாலை

*164 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்காரால் நடத்தப்பட்டுவந்த சுடர் தீப்பெட்டித் தொழிற்சாலை எந்த ஆண்டில் **ஆரம்பிக்கப்பட்டது ?**

எந்த ஆண்டில் மூடப்பட்டது?

(உ) அதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசினர் குடிசைத் தொழில் தீப்பெட்டித் தொழிற்சாலை 1956-ம் ஆண்டில் துவக்கப்பட்டது.

(இ) எந்த ஆண்டில் மூடப்பட்டது ?

(உ) ரூபாய் 3,53,916.12.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த சுடர் தீப்பெட்டித் தொழிற்சாலை நடைபெற்று வருகிறதா? ஆம் என்றால் அது எந்த அடிப்படையில் நடைபெறுகிறது ? இன்றைக்காவது அது லாபகரமாக நடைபெறுகிறதா ? அல்லது நஷ்டத்தில் நடைபெறுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை பெரம்பூரிலே 1956-இல் அரசாங்கத்தின் சார்பிலே ஆரம்பிக்கப்பட்டு 1961 வரை நடைபெற்றது. எதிர்பார்த்த அளவிற்கு இதில் லாபம் வராததினால், அதனுடைய நோக்கம் நிறைவேற்றப்படாமல் இருந்த காரணத்தினால் அது காஞ்சீபுரத்திற்கு மாற்றப்பட்டது. 1962-ல் மீண்டும் காஞ்சிபுரத்திலே கூட்டுறவு முறையிலே துவக்கப்பட்டது. இதுவரையில் அது நஷ்டத்தில் தான் இருந்தது. இனி லாபம் தரக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : கூட்டுறவு முறையில் நடைபெறும் இந்தச் சுடர் தீப்பெட்டித் தொழிற்சாலை இன்றையதினம் நஷ்டத்தில் ஓடுவதன் காரணமாக மீண்டும் அதை மூடக்கூடிய நிலைமை ஏற்படும் என்று சொல்லப்படுவது உண்மையா? அப்படியென்றால், ஒரேயடியாக அதை மூடுவதற்கு உத்தேசம் உண்டா? அல்லது மீண்டும் நல்ல முறையில் நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுவரையில் நஷ்டத்தில்தான் இருக்கிறது. இந்த ஆண்டுக்கு மேல் லாபம் வரும் என்று சொல்லப்படுகிறது. எதிர்பார்க்கிறபடி நடைபெறுகிறதா என்று பார்த்த பிறகுதான் அது திறந்து வைக்கப்படுமா அல்லது மூடிவிடப்படுமா என்பது முடிவு செய்யப்படும்.

*165 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் எத்தனை அரசாங்கத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன ?

(இ) அவை ஒவ்வொன்றிலும் முதலிடு செய்யப்பட்டுள்ள தொகை என்ன ?

(உ) அவை ஒவ்வொன்றிலும் எத்தனை நபர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அரசாங்கத் தீப்பெட்டித் தொழிற்சாலை எதுவும் இப்போது இல்லை.

(இ) & (உ) வினா எழாது.

திரு. கே. வினாயகம் : இந்த அரசாங்கத்தால் நடத்தப்படுகிற தீப்பெட்டித் தொழிற்சாலை நஷ்டத்திற்கு வந்ததற்கு யார் பொறுப்பு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பெரம்பூரில் தொழிற்சாலையை வைப்பதற்கு முடிவு எடுத்ததுதான் ஏற்பட்ட தவறாகும். அங்கு இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்காக அதை வைத்தார்கள். ஆனால், அங்கே எதிர்பார்த்த அளவிற்கு கூலி வேலை செய்வதற்கு யாரும் முன்வரவில்லை. இந்தத் தொழிற்சாலையின் மூலம் தரப்படுகின்ற கூலியைவிட அங்கேயுள்ள வேறு பல தொழிற்சாலைகளிலே அதிகமாகக் கூலி கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. அங்கேயுள்ள காவல் துறையினர் வீட்டுப் பெண்களுக்காக இந்தத் தொழிற்சாலை பயன்படும் என்று கருதி அங்கே ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அங்கேயுள்ளவர்கள் அதைவிட வேறு வகையில் அதிகமாகக் கூலி பெறுவதற்குச் சந்தர்ப்பம் இருந்தது. அங்கே சரியான சூழ்நிலை இல்லாத காரணத்தினால் அதை மூடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்குப் பிறகுதான் காஞ்சீபுரத்தில் கூட்டுறவு முறையில் மீண்டும் அது ஏற்பட்டது.

1967 ஜூலை 11]

திரு. பெ. மலைச்சாமி : தீப்பெட்டித் தொழிற்சாலைகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் இந்த அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பெரம்பூரில் நடத்தப்பட்ட நேரத்தில் வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் அங்கு இல்லாத காரணத்தினால் இதிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வேலையில்லாமல் இருக்கக்கூடிய காஞ்சீபுரத்தில் அது கூட்டுறவு முறையில் இப்போது நடக்கும்போது நஷ்டம் ஏற்படுவதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அங்கு வேலையில்லாது இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன்படும் என்றுதான் அங்கு ஏற்படுத்தப்பட்டது. இப்போது நஷ்டத்தில்தான் அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு லாபம் வரக்கூடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் தனியார் நடத்துகின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளெல்லாம் லாபகரமாக நடத்தப்படுகின்றன. ஆகவே, தென் மாவட்டங்களில் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளை அரசினர் சார்பில் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை. தனியார் நடத்துகின்ற தொழிற்சாலைகளில் அடிக்கடி ஆபத்துகளுக்கு இரையாகும் நிலைமை இருக்கிறது.

கைக்கடிகார இயந்திரங்கள்

*166 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் கைக்கடிகார உதிரிப் பாகங்களை இணைக்கும் பிரிவுகள் எத்தனை, எங்கெங்கு இயங்கி வருகின்றன ?

(இ) 1967-68-ல் மேலும் எத்தனை பிரிவுகள் எங்கெங்கு துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இம் மாநிலத்தில் கைக்கடிகாரங்கள், கடிகாரங்கள் முதலியவைகளை உற்பத்தி செய்யும் தொழிலில் அல்லது அவைகளின் உதிரிப் பாகங்களை இணைத்துக் கடிகாரம் அமைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள, தொழில்துறையுடன் சிறு அளவுத் தொழில்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனங்களின் பட்டியல் ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களால் உற்பத்தி

---

a 820—822ம் பக்கங்களில் I இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.